பக்கங்கள்:-16

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 25 | வியாழக்கிழமை | 12.10.2023 | அதிர்வு 72 |
|---|---|---|---|---|---|

## காலிமுகத்திடலில் சடலம் ஒன்று மீட்பு

### பிக்கு எனச் சந்தேகம்

கொழும்பு, காலிமுகத்திடல் கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கோட்டை பொலிஸ் 03

# ரணில் - ஜெய்சங்கர் சந்திப்பு

## இலங்கை - இந்திய உறவுகளை மேலும் பலப்படுத்த 3 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் கூட்டத்தில் பங்கேற்க இலங்கைக்கு வருகை தந்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்திய – இலங்கை உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு, இரு நாடுகளுக்கும் 04



# ஏழு தமிழ்க் கட்சிகள் இணைந்து மோடிக்குக் கடிதம் அனுப்ப முயற்சி



## விக்னேஸ்வரன் தகவல்

- எஸ்.நிதர்ஷன் -

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து தமிழ் மக்களின் நிலைகள் தொடர்பில் தெளிவுபடுத்தி தீர்க்கமான முடிவொன்றை எட்டுவதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த ஏழு கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றை அனுப்பத் தயாராகவுள்ளோம்.”

- இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 03

# யாழ்.பருத்தித்துறையில் கடமையாற்றும் பெண் பொலிஸ் அதிகாரி விபத்தில் சாவு



யாழ். பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் விடுமுறைக்காக வீடு சென்ற நிலையில் சாவடைந்துள்ளார்.

தம்புள்ளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் 24 வயதான சாந்திமா ரணசிங்க என்பவரே உயிரிழந்துள்ளார்.

அம்பேபூச – திருகோணமலை வீதியில் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் மோதுண்ட நிலையில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் படுகாயம் அடைந்த பெண் பொலிஸ் அதிகாரி வைத்தியசலையில் சேர்க்கப்பட்ட நிலையில் 03

# மு.காவின் புதிய எம்.பி. மௌலானா சத்தியக் கடதாசியில் கையொப்பம்!



(எம்.எம்.றம்ஸீன்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய நாடாளுமன்ற உறுப்பினராக செய்யித் அலி ஸாஹிர் மௌலானாவின் பெயர் விசேட வர்த்தமானியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதையடுத்துச் 03




பழைய விடயங்களை நினைவூட்டிப் பகிர்ந்து கொள்வதும் கூட இந்தப் பத்திக்கு பொருத்தமானது என்பதால் இந்தப் பதிவு.

அமைச்சர் நஸீர் அகம்மட் தமது எம்.பி. பதவியை இழந்தமையினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் அடுத்த நிலையில் இருக்கும் அலி ஸாஹிர் மௌலானா புதிய எம்.பியாகின்றார். 03

# இந்திய உதவியில் மலையகத்தில் பத்தாயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்து!

## ரணில் - ஜெய்சங்கர் முன்னிலையில் நேற்று





இந்திய அரசின் நிதி பங்களிப்புடன் மலையகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டு திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், நேற்று முக்கிய சந்திப்புகளில் ஈடுப்பட்டார். அத்துடன், ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் ஆரம்பமாகவே 10 ஆயிரம் வீட்டு திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் இலங்கை சார்பில் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்தியா சார்பில் கையொப்பமிட்டார்.

அத்துடன், இந்திய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள 126 வீடுகள், நிகழ்நிலை ஊடாக திறந்து வைக்கப்பட்டு, பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பதுளை, மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலேயே மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இந்திய அரசால் மலையகத்தில் ஏற்கனவே 4 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பாரத பிரதமர் மோடி, மலையகம் வந்திருந்தவேளை 10 ஆயிரம் வீடுகளுக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டது.

முன்னர் வீடொன்றுக்கு 10 லட்சம் ரூபா உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் வீடொன்றுக்கு 28 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் தேனுகா விதானகமகே, நாடாளுமன்ற உறுப்பினர் எம். ராமேஸ்வரன், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் பணிமனையின் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் திரு.சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி. அருணி விஜேவர்தன, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொலம்பகே மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி என பல முக்கியஸ்தர்களும் கலந்துக் கொண்டனர்.

# யாழ்.முற்றவெளியில் டிசம்பர் 21ஆம் திகதி பாடகர் ஹரிஹரனின் இலவச இசை நிகழ்வு

## கலா மாஸ்டர் தலைமையில் ஊடக சந்திப்பு






– எஸ்.நிதர்ஷன் –

நொதேண்யுனியின் ஏற்பாட்டில் பிரபல தென்னிந்தியப் பாடகர் ஹரிஹரனின் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி ஒன்று எதிர்வரும் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம், முற்றவெளிஅரங்கில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான ஊடக சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

ஊடக சந்திப்பில் தென்னிந்தியாவின் பிரபல நடன இயக்குநர் கலா மாஸ்டர் கலந்துகொண்டு இசை நிகழ்ச்சி தொடர்பான தகவல்களைத் தெரிவித்தார்.

இந்த இசை நிகழ்ச்சி டிசம்பர் மாதம் 21 ஆம் தகதி யாழ்ப்பாணம், முற்றவெளிஅரங்கில் முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளது. இதற்கான நுழைவுச்சீட்டுகள் எதிர்வரும் நாட்களில் வழங்கப்படும் என ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களுக்கு மிகவும் பரிச்சயமான பெயர் இது. இவரைப்பற்றிஉங்களுக்குஎன்னநினைவுக்கு வருகின்றது?

2001 டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில் மட்டுமட்டாக பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்தது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இரு எதிர்த் தரப்புக் கட்சிகளைச் சேர்ந்தோர் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் வந்த இரண்டாவது சந்தர்ப்பம் இது. முதல் முறை சந்திரிகா பிரதமராகவும், டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாகவும் இருந்த முறைமை குறுகிய காலத்துக்கு நீடித்தது.

ரணிலின் அரசு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை மீறி, விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தத்திற்கு இணங்கியது. சமாதானப் பேச்சுக்களைப் பல்வேறு நாடுகளிலும் முன்னெடுத்தது. அந்த அமைதிப் பேச்சுக்களின் போதெல்லாம் அங்கங்கு பக்கத்தில் இருந்து – நெருக்கமாக இரு தரப்புகளுடனும் ஊடாடி – செய்தி சேகரிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

இந்த சமாதான நிலைமை பொறுக்காமல் 2004 பெப்ரவரியில் ரணிலின் அரசை முற்கூட்டியே கலைத்து பொதுத் தேர்தலுக்கு வழி செய்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

2004 ஏப்ரல் 2 ஆம் திகதி பொதுத் தேர்தல்.

2004 பெப்ரவரியில் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது கிழக்கில் புலிகளின் தலைமையின் கீழ் செயற்பட்டுக் கொண்டிருந்தார் கிழக்கின் புலிகளின் தளபதி கருணா. கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல் கூட கருணாவின் இணக்கத்துடன்தான் இறுதி செய்யப்பட்டது. தலைவர் பிரபாகரனுக்கு பட்டியலை அனுப்பி அனுமதி பெற்றுத் தான் அதற்கு இசைவு தந்தார் கருணா.

எனினும் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு, வாக்களிப்பு நடப்பதற்கிடையில் தலைமையில் இருந்து பிரிந்து கருணா தனி வழி புறப்பட, மோதல் வெடித்தது.

அப்போது யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருந்தது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இருந்தது. வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் பல பகுதிகள் அரசகட்டுப்பாட்டிலும் இருந்தன.

கிழக்கில் தனி வழி புறப்பட்ட கருணா தரப்பை மடக்குவதற்கு வடக்கில் இருந்து புலிகளின் தலைமை படைகளை நகர்த்துவது என்றால் அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். அப்படிப் பெரும் படையை நகர்த்துவது யுத்த நிறுத்த மீறலாகும். எனவே புலிகளின் தலைமை படைகளை அந்தத் தேர்தல் சமயத்தில் நகர்த்தாது என்றே கருணா எதிர் பார்த்தார்.

ஆனால் எதிர்பார்ப்புகளை மீறிக் காரியங்களைச் செய்வதுதானே புலிகளின் பாணி..! திடீரென வடக்கு எல்லையோரங்களில் இருந்து ஒரு பெரும் படை நகர்வை அதிரடியாக அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் ஊடுருவித் தாண்டி புலிகள் கிழக்கு நோக்கி நகர்த்தினர். ஆரம்பத்தில் கருணா தரப்பிடமிருந்து எதிர்ப்பும் சண்டைகளும் ஆங்காங்கே கிட்டின. ஆனால் கருணா தரப்பு போட்டது போட்டபடி இருக்க ஓடித் தப்பித் தலைமறைவாகும் நிலைமை ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் தேர்தல் முடிந்து, முடிவுகள் வெளியாகின. 82 எம்.பிக்களுடன் ரணிலின் ஐ.தே.கட்சி எதிரணியில் அமரும் நிலைமை ஏற்பட்டது. சந்திரிகாவின் கூட்டணி 105 எம்.பிக்களுடன் சிறுபான்மை அரசை அமைத்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 22 பேர் எம்.பிக்களாகினர்.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் எம்.பியானார் இந்த அலி ஸாகிர் மௌலானா. ஏப்ரல் இரண்டாம் திகதி தேர்தல் முடிந்து நாலாம் திகதி முடிவுகள் வெளியாக, தேசியப் பட்டியல் நியமனம் பெற்றார் அலி ஸாஹிர் மௌலானா. ஏப்ரல் 22 ஆம் திகதி பதவி ஏற்றார். ஆனால் அவரால் அந்தப் பதவியில் நீடிக்க முடியவில்லை.

கிழக்கில் புலிகளின் ஊடுருவல் தாக்குதலை அடுத்து தலைமறைவான கருணா குறித்து அப்போது நான் ஆசிரியராக இருந்த 'சுடர்ஒளி' பத்திரிகையில் ஒரு பரபரப்புச் செய்தியை வெளியிட்டேன். எந்தத் தரப்பு ஊடாக அந்தச் செய்தி கிடைத்தது என்பதை நான் இப்போதும் தெரிவிக்க விரும்பவில்லை.

கிழக்கில் சுற்றி வளைக்கப்பட்ட கருணாவை முஸ்லிமான அலி ஸாஹிர் மௌலானாவே பாதுகாப்பாகத் தமது வாகனத்தில் ஒளித்து, மறைத்து கொழும்புக்குக் கூட்டி வந்தார் என்றும், கொழும்பில் இன்ன ஹோட்டலில் தங்க வைத்து, படைத்தரப்போடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார் என்றும், பல விவரங்களை நான் அப்போது வெளியிட்டேன் என்று நினைவு.

இந்த விடயங்களினால் அலி ஸாகிர் மௌலானாவின் கட்சித் தலைவரும், ஜனாதிபதி சந்திரிகாவை மீறி தங்களுடன் அதுவரை சமரச பேச்சு நடத்தி வந்த வருமான ரணில் விக்கிரமசிங்க மீது புலிகளின் தலைமை கடும் சீற்றத்தில் இருப்பதாகவும் நான் எனது செய்தியில் விவரித்திருந்தேன்.

எனது செய்திக்குள் புதைந்த கிடந்த தகவலை அப்போது எதிர்க்கட்சி தலைவராகிவிட்ட ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பினர் விரைந்து புரிந்து கொண்டனர். 2004 ஏப்ரல் 23ஆம் திகதி தேசியப் பட்டியல் எம்.பியாகப் பதவியேற்ற அலி ஸாஹிர் மௌலானாவை, எனது பத்திரிகைச் செய்தி வெளியானதும் அந்தப் பதவியை ராஜினாமா செய்யும்படி ரணில் வற்புறுத்தினார். அவர் ஜூன் நடுப் பகுதியில் எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்தார். ரணிலின் ஆலோசனையின் பேரில் பாதுகாப்புக் கருதி, அலி ஸாஹிர் மௌலானா அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்று அங்கேயே தங்கினார்.

நீண்ட வருடங்களின் பின்னர், கள நிலைமைகள் மாற, அவர் இலங்கை மீண்டு, முஸ்லிம் காங்கிரஸில் சேர்ந்து, ஒரு முழு நாடாளுமன்றக் காலமும் எம்.பியாக இருந்தமை பின்னர் நிகழ்ந்தது.

2004 இல் தமக்குக் கிட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரண்டு மாதத்திற்குள் தாம் துறக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியமைக்காக எனது பத்திரிகை மீதும், அதன் ஆசிரியராக அந்தச் செய்தியைத் தேடிப்பிடித்து வெளியிட்ட என் மீதும் அவர் மிகவும் கடுப்பாக இருந்தார் என்றும் அறிந்து கொண்டேன். இது தனிப்பட்ட கோபதாபம் அல்ல. எங்கள் கடமையால் வந்தது. ஆனாலும் அவரின் கோபத்தில் ஒரு நியாயம் இருந்ததையும் நான் மறுக்க முனையவில்லை.

## ஏழு தமிழ் கட்சிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாணத்தில் நேற்று அவரது வாசஸ்தலத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

"உடனடியாகக் கடிதத்தை அனுப்புவதா, இல்லையா என்பது குறித்து எதிர் வரும் வெள்ளிக்கிழமை நாங்கள் மீளவும் கூடியே தீர்மானம் எடுக்கவுள்ளோம்.

இன்று சில கட்சித் தலைவர்கள் வருகை தராமையின் காரணமாக இறுதி முடிவு எட்டப்படவில்லை.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைபடுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்குக் காணப்படுகின்றது.

தற்போது நாட்டின் நிலை குறித்தும், தமிழ் மக்களது நிலை குறித்தும், 13 ஐ அமுல்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் இந்தியப் பிரதமருடன் பேச நாம் விருப்பமாக இருக்கின்றோம்.

தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

கட்சித் தலைவர்கள் அனைவரும் இதற்குச் சம்மதம் தெரிவிக்கின்ற போதுதான் இது முழுமையான செயல் வடிவம் பெறும்." – என்றார்.

## மு.காவின் புதிய எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

சத்தியக் கடதாசியில் கையொப்பம் இடும் நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சுபியான் முன்னிலையில் மட்டக்களப்பு தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்றது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் நஸீர் அஹமட்டின் நாடாளுமன்றப் பதவி வெற்றிடத்துக்கே செய்யித் அலி ஸாஹிர் மௌலானா நியமிக்கப்பட்டுள்ளார்.

## யாழ்.பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சமூக பொலிஸ் பிரிவில் கடமையாற்றி வந்த தம்புள்ளையைச் சேர்ந்த யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## காலிமுகத்திடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிலையத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்தச் சடலத்தை மீட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர் 35 முதல் 40 வயதுக்குட்பட்ட 5 அடி 15 அங்குல உயரம் கொண்ட மொட்டைத் தலை மற்றும் மெல்லிய, சாதாரண உடலமைப்பு கொண்டவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இறந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை.

கடற்கரையில் மெரூன் நிற ஆடை ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அதன்படி சடலம் பிக்கு ஒருவருடையது எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோட்டா நாட்டை விட்டு வெளியேறியமை தவறு

## நாமல் இப்படிக் கருத்து




முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அன்று நாட்டை விட்டு வெளியேறியமை தவறு என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தியாவின் தந்தி ரி.வி.க்கு வழங்கிய நேர்காணலி லேயே நாமல் ராஜபக்ஷ எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

'நாட்டின் அரசியல், பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்புக் கூற வேண்டி முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியமையை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள் அல்லது அந்த நிலைப்பாட்டை சரியென நினைக்கிறீர்களா?' என்று தந்தி டி.வி.யின் நேர்காணலில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த நாமல் எம்.பி.,

"அது தவறானது, இது என்னுடைய தனிப்பட்ட கருத்து. எமது மக்கள் ஜனநாயகத்தை விரும்பும் மக்கள், கோட்டாபய ராஜபக்ஷ 52 சதவீத மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதி. வேறு எந்த ஜனாதிபதியும் அவ்வாறு வெற்றி பெறவில்லை.

நாங்கள் நாட்டைப் பொறுபேற்றபோது நாடு மிகவும் நெருக்கடியான சூழலிலேயே இருந்தது. துரதிஷ்டவசமான பொருளாதார நெருக்கடி, கொரோனா பெருந்தொற்று, வேலை யில்லாப் பிரச்சினை, வட்டி வீதங்கள் அதிகரிப்பு, டொலர் கையிருப்பில்லாத காலப்பகுதியிலேயே நாம் நாட்டைப் பொறுப்பேற்றோம்" – என்று பதிலளித்தார்.

ராஜபக்ஷக்களின் ஆட்சியைக் கவிழ்க்க சர்வதேச ஆதரவு டன் சதி நடைபெற்றுள்ளது என்றும் அவர் கூறினார்.

"தேர்தலில் தமிழகத்தில் பா.ஜ.க. வெற்றி பெறாமல் போனதைப்போல்தான் எம்மாலும் தமிழர்களின் மனங்க ளில் நம்பிக்கையைப் பெற முடியாமல் போனது. எப்போது பா.ஜ.க. தமிழகத்தில் வெற்றி பெறுமோ அப்போது நான் நமது கட்சியை வடக்கு, கிழக்கில் வெற்றி பெறச் செய்வேன் என்று சொல்லியுள்ளேன்" – என்றும் அவர் குறிப்பிட்டார்.

"என்னுடைய தந்தை செல்வார் இந்தியாவும் இலங் கையும் உறவினர் என்று. உறவினர் என்பதால் ஏற்றம் இறக்கம் இருக்கத்தானே செய்யும். மோடியின் தமிழ் பேசும் விதமும் அப்பாவின் தமிழ் பேசும் விதமும் கிட்டத்தட்ட ஒன்றுதான்" – என்றும் அவர் கூறினார்.

"எனக்கு சச்சின் டெண்டுல்கரை எப்பவும் பிடிக்கும் யுவராஜையும் பிடிக்கும். இப்போது ரோகித் சர்மா, கோலி, பும்ரா ஆகியோரைப் பிடிக்கும். அதேபோல் சினிமாவில் விஜயை மிகவும் பிடிக்கும். ஆனால், என்னுடைய அப்பாவுக்கு ரஜினியைப் பிடிக்கும்" என்றும் அந்த நேர்காணலில் நாமல் ராஜபக்ஷ எம்.பி. மேலும் தெரிவித்தார்.

## ரணில் - ஜெய்சங்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடையிலான ஒத்துழைப்புக்களைப் பலப் படுத்திக்கொள்ளும் வகையிலான மூன்று ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

அதேபோல் இந்தியக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் இந்த நாட்டில் முன்னெ டுக்கப்படும் வீட்டுத் திட்டத்தை இணையத் தின் ஊடாக திறந்து வைக்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற் கான திட்டத்தின் நான்காவது அத்தியாயத் தின் கீழ் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 1.026 மில் லியன் ரூபாவை 2.8 மில்லியன் ரூபா வாக அதிகரித்துக்கொள்வதற்கான ஒப் பந்தமும் கைசாத்திடப்பட்டது.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந் திய அரசாங்கத்தின் உதவியுடன் முன் னெடுக்கப்பட்டுவரும் 9 திட்டங்களை விரை வில் நிறைவு செய்வதற்கு அவசியமான மேலதிக ஒதுக்கீடுகளை இந்திய அரசாங் கம் வழங்கவுள்ளதோடு அதற்கான ஒப் பந்தமும் கைசாத்திடப்பட்டது.

அதன் கீழ் வடக்கு மாகாணத்தின் 27 பாடசாலைகளை மேம்படுத்தல், மன்னார் மற்றும் அநுராதபுரம் வீடமைப்புத் திட் டங்கள், அட்டன் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் புஸ்ஸலாவை சரஸ்வதி மத்திய கல்லூரியின் அபிவி ருத்தி பணிகள், பொலன்னறுவையில் பல்லின – மும்மொழிப் பாடசாலை யொன்றை நிர்மாணித்தல், யாழ்ப்பாணத் தில் மழைநீரை சேகரிக்கும் வேலைத்திட் டத்தின் கீழான 2889 நிர்மாணிப்புக் கள், தம்புள்ளையில் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் பழுதடையாமல் பாது காப்பதற்கான 5000 மெட்ரிக் டொன் கொள்ளளவுடைய குளிரூட்டி வசதிகள் அமைத்தல், மட்டக்களப்பு போதனா வைத் தியசாலைக்கு புதிய சத்திரசிகிச்சை பிரி வொன்றை நிறுவுதல் உள்ளிட்ட வேலைத் திட்டங்கள் விரைவில் நிறைவு செய்யப் படவுள்ளன.

அதேபோல் இலங்கையின் தேசிய பாலுற்பத்தியை பலப்படுத்தும் வகையில் இந்தியாவின் குஜராத் கூட்டுறவு பால் விற்பனை சம்மேளனமான (அமுல் குழுமம்) மற்றும் இலங்கையின் காகீல்ஸ் கூட்டு வர்த்தக நிறுவனம், இந்திய தேசிய பாலுற்பத்தி ஊக்குவிப்பு சபை ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ள கூட்டு வேலைத்திட்டத்துக்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் பலனாகக் கைசாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இந்நாட்டின் கால்நடை வளர்ப்புத் துறையை மேம்படுத் துவதற்கான நிதி உதவிகள் கிடைக் கவுள்ளன. அத்தோடு, முதல் ஐந்து வரு டங்களில் பால் உற்பத்தியை 53 வீதத் தால் அதிகரித்துக்கொள்ளவும், 15 வருடங் களில் இலங்கையை பாலுற்பத்தியில் தன் னிறைவான நாடாக மாற்றும் நோக்கத் துடனும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது.

அதன் கீழ் கால்நடைகளுக்கு அவசிய மான உயர்தர மருந்துகள் மற்றும் உணவு, தொழில்நுட்ப உதவிகளை வழங்கி 2 இலட்சம் பாலுற்பத்தியாளர் களை வலுவூட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கால்நடை வளர்ப்புத் துறையை டிஜிட்டல் மயமாக்குதல், பால் உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற் கான தொழில்நுட்பங்களுக்கான முதலீடு கள் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்வ தற்கான வாய்ப்பை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரதிபலன்கள் கிட்டும்.

இதன்போது இலங்கை – இந்திய உறவுகளுக்கு 75 வருடம் பூர்த்தியாவதை யிட்டு விசேட நினைவுச் சின்னமொன்றும் வெளியிடப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தா னிகர் கோபால் பாக்லே, இந்திய வெளி விவகார அமைச்சின் இணைச் செயலாளர் புனீத் அகர்வால் ஜே.பீ.சிங், இலங்கைக் கான இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே, இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரகூ புரி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் தேனுக விதான கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஸ்வரன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொலம் பகே உள்ளிட்டவர்களும் கலந்துகொண் டிருந்தனர்.

# இலங்கைப் பணியாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவது தற்காலிகமாக இடைநிறுத்தம்

இலங்கைப் பணியாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனைத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் நாடு திரும்ப விரும்பும் இலங்கையர்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கை பணியாளர்கள் தொடர்பில் தகவல்களைப் பெறுவதற்கு 071 66 40 560 எனும் வட்ஸ் அப் இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



# கொழும்பில் மவ்பிம மக்கள் கட்சியின் தேசிய தலைமையகம் திறந்து வைப்பு





தொழிலதிபரான திலித் ஜயவீர தலைமையிலான மவ்பிம மக்கள் கட்சியின் தேசிய தலைமையகம் நேற்று முற்பகல் கொழும்பில் திறந்து வைக்கப்பட்டது.

‘புதிய சிந்தனையுடன் முன்னோக்கி செல்வோம்’ எனும் தொனிப்பொருளில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட மவ்பிம ஜனதா கட்சியின் தலைமையகம் கொழும்பு 08, பூங்கா மாவத்தையில் அமைந்துள்ளது.

கட்சியின் சிரேஷ்ட தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஹேமகுமார நாணயக்கார, முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராத யஹம்பத், அரசியல் ஆர்வலர்கள், வர்த்தகர்கள், ஓய்வுபெற்ற அரச மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

மவ்பிம மக்கள் கட்சியின் தலைவர் திலித் ஜயவீர மற்றும் அதன் ஸ்தாபகரும் தற்போதைய சிரேஷ்ட தலைவருமான ஹேமகுமார நாணயக்கார ஆகியோரின் தலைமையில் புதிய கட்சி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

திலித் ஜயவீர தலைமையிலான நிறுவனத்தினால் ‘தமிழன்’ தமிழ் நாளிதழ் உட்பட பல ஊடகங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திருச்சபையின் குத்துக்கரணம்

தேசிய இனப் பிரச்சினை போன்ற நெருக்கடியான விடயங்களில் - நீதியின் பக்கம் நிற்காமல் - எப்போதுமே அநீதியும் கொடூரமும் இழைக்கும் பேரினவாத வெறிப் போக்குத் தரப்புக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளும் கொழும்பு பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்தும் ஏனைய தென்னிலங்கை ஆயர்களும், இப்போது தங்கள் கிறிஸ்தவ மக்களுக்கு ஈஸ்டர் குண்டுத் தொடர்த் தாக்குதல் மூலம் இழைக்கப்பட்ட பேரழிவு கொடுரங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் விடயத்திலும், பேரினவாத வெறிப்போக்கு மேலாண்மைச் சக்திகளுக்கி முன்னால் மீண்டும் ஒரு தடவை மடங்கி இருக்கின்றார்கள். ஏன் மண்டியிட்டிருக்கின்றார்கள் என்றும் கூடக் கூறலாம்.

பேரினவாத வெறித் தலைமைகளின் ஏவல் கட்டமைப்புகளாகவும், சக்திகளாகவும் செயல்படும் முப்படைகளும், பொலிஸும் அந்தப் பேரினவாத தலைமைகளின் இனவாத செயற்பாடுகளுக்கும் - மற்றைய சிறுபான்மை இனங்களை அழித்தொழிக்கும் கொடூர நடவடிக்கைகளுக்கும் - உரிய கருவிகளாகவே இயங்கி வருகின்றன என்பது கண்கூடு.

இனம் சம்பந்தப்பட்ட விடயங்களில் சாதாரண தவறுகள், குற்றங்கள் மட்டுமல்ல, அவற்றையும் தாண்டி, மிக மோசமான யுத்த குற்றங்கள், இனவழிப்புக் கொடுரங்களை இழைத்த குற்றங்களுக்காக கூட, இந்தச் சிங்களப் படைகள் குற்ற விசாரணைகளைத் தன்னும் எதிர்கொள்ள பேரினவாத வெறித் தலைமைகள் அனுமதிக்க மாட்டா என்பது வெளிப்படையான உண்மை.

தமிழர் தேசம் மீதான இனவழிப்பு நடவடிக்கைகளில் மட்டுமல்ல, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் விவகாரங்களிலும் கூட, தனது படைகள் மற்றும் பாதுகாப்புத் தரப்புகள் மீது குற்றம் சுமத்தப்படுவதற்கு சிங்கள, பௌத்த பேரினவாதத்தில் ஊறிய அதன் தலைமைகள் அனுமதிக்கப் போவதேயில்லை.

கர்த்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட்ட தென்னிலங்கை ஆயர் சமூகத்துக்கு இது ஐயம் திரிபறத் தெளிவாகத் தெரியும். உண்மை புரியும். அதனால்தான் ஈஸ்டர் ஞயிறு குண்டுத் தாக்குதல் விடயத்துக்கு சர்வதேச விசாரணையை இத்தரப்புகள் அண்மைக் காலம் வரைக் கோரி நின்றன. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் வரை இந்த விவகாரத்திற்கு விசாரணை கேட்டு அவை சென்றன.

ஆனால், அப்படி ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விவகாரங்களுக்கு சர்வதேச விசாரணையைக் கோருவது, தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நிகழ்த்தப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச விசாரணை கோருவதை நியாயப்படுத்துகின்றது என்று சுட்டிக் காட்டப்பட்டதும், கர்த்தினால் உட்பட்ட தென்னிலங்கை ஆயர் சமூகம் இப்போது தனது நிலைப்பாட்டில் இருந்து குத்துக்கரணம் அடிக்கிறது.

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தை சமாளித்து, தடவிக் கொடுத்து, தமிழர் விவகாரத்தில் சர்வதேச விசாரணை கோரும் நியாயத்தையும் புறம் தள்ளி, பலவீனப்படுத்தும் விதத்தில், புதுக்கதை விடுகின்றது அந்தக் கிறிஸ்தவத் தலைமை.

இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விடயங்களை சுதந்திரமான வெளிநாட்டுப் பார்வையாளர்கள் கண்காணிக்க, உள்ளூர் விசாரணை நடத்தப்பட்டால் போதுமானது என்று குறிப்பிட்டு இப்போது உள்ளூர் விசாரணை மட்டத்துக்கு இறங்கி வந்திருக்கிறது இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபை.

# நெத்தலியின் விலை குறைக்கப்படவுள்ளது



எதிர்வரும் ஒரு வாரத்திற்குள் ஒரு கிலோ நெத்தலியின் விலை 200 முதல் 250 ரூபாவிற்குள் குறைக்கப்படவுள்ளது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 1,250 ரூபா வரையில் தற்போது விற்பனை செய்யப்படும் கோழி இறைச்சியின் விலையை டிசம்பர் மாதமளவில் 850 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என எதிர்பார்க்கிறோம் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கோழி இறைச்சி, முட்டை, கருவாடு மற்றும் மீனின் விலைகள் அதிகரித்திருந்தமையால், நாட்டில் போசாக்கு தொடர்பான பிரச்சினை ஏற்பட்டது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தெல்தோட்டை ஆற்றில் நேற்று அடித்துச் செல்லப்பட்ட சிறுவன்



கண்டி தெல்தோட்டை – லிட்டில்வெளி பகுதியிலுள்ள ஆற்றில் நேற்று மாலை சிறுவன் ஒருவன்அடித்துச் சென்றுள்ளப்பட்டுள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச மக்கள் பலர் சிறுவனைத் தேடி வருகின்ற போதிலும், சிறுவனை இதுவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சிறுவனை மீட்கும் நடவடிக்கைகளுக்கான இராணுவத்தின் உதவி நாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு – பதுளை பிரதான வீதியில் மீண்டும் மண் சரிவு



கொழும்பு – பதுளை பிரதான வீதியின் ஒப்பநாயக்க பகுதியில் மண்மேடு சரிந்துள்ளது.

இதன் காரணமாக ஒப்பநாயக்க – மாதொல்ல பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

அந்த வீதியூடாகச் செல்லும் வாகனங்களின் சாரதிகளை மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# மத்திய பிரதேசத்தில் தோற்ற தொகுதிகளில் அரசியல்வாதிகளுக்கு மீண்டும் வாய்ப்பு!

## ஆட்சியை தக்கவைக்க பா.ஜ.க. புதிய உத்தி!



மத்தியபிரதேசத்தில் தனது ஆட்சியை தக்கவைக்க பா.ஜ.க. புதிய உத்தியை பயன்படுத்துகிறது. இதன்படி தோல்வியுற்ற தொகுதிகளில் மத்திய அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களை போட்டியிட வைக்கிறது.

மத்தியபிரதேசத்தில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பா.ஜ.க. ஆட்சி செய்கிறது. இங்கு நான்காவது முறையாக வென்று தனது ஆட்சியை தக்கவைக்க பா.ஜ.க. தீவிரம் காட்டுகிறது. இதற்காக, அக்கட்சி வெளியிட்டுள்ள 2 வேட்பாளர்கள் பட்டியலில் 3 மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட 7 எம்.பி.க்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதன்மூலம் அவர்கள் போட்டியிடும் தொகுதிகளை சுற்றியுள்ள தொகுதிகளிலும் தாக்கம் ஏற்பட்டு வெற்றி கிடைக்கும் என பா.ஜ.க. எதிர்பார்க்கிறது. இதில் மேலும் ஒரு புதிய அரசியல் உத்தியை பா.ஜ.க. கையாளுகிறது.

இதன்படி, கடந்த சட்டப்பேரவை தேர்தலில் தாம் தோல்வியுற்ற தொகுதிகளில் மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட தனது எம்.பி.க்களை போட்டியிட வைக்கிறது. இதனால் தனது கையைவிட்டு நழுவிய தொகுதிகளில் இந்தமுறை வெற்றி கிடைக்கும் என பா.ஜ.க. எதிர்பார்க்கிறது.

இவர்களுடன் தமது கட்சியின் தேசியத் தலைவர்கள் சிலரையும் தோல்விடைந்த தொகுதிகளில் பா.ஜ.க. நிறுத்துகிறது. இதன்மூலம் உட்கட்சி பூசலையும் பா.ஜ.க. தடுத்த நிறுத்த முயற்சிக்கிறது.

கடந்த குஜராத் சட்டப்பேரவை தேர்தலில் புதுமுகங்கள் பலருக்கு பா.ஜ.க வாய்ப்பளித்தது.

இதன் பின்னர் அங்கு 6 ஆவது முறையாக வெற்றி பெற்று பா.ஜ.க. ஆட்சியில் உள்ளது. எனவே குஜராத் அரசியல் சூத்திரத்தை மத்திய பிரதேசத்திலும் பா.ஜ.க. அமு லாக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், மத்தியபிரதேசத்தில் நேற்று வெளியான ஐந்தாவது வேட்பாளர் பட்டியலில் 24 மாநில அமைச்சர்கள் மற்றும் பெரும்பாலான எம்.எல்.ஏக் களுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் தாங்கள் வெற்றி பெற்ற தொகுதியிலேயே மீண்டும் போட்டியிடுகின்றனர்.

மத்தியபிரதேசத்தில் பா.ஜ.கவின் முதல்வர் வேட்பாளராக இந்தமுறை எவரும் முன்னிறுத்தப்படவில்லை. எனினும் நான்காவது முறையாக மத்தியபிரதேச முதல்வராக இருக்கும் சிவராஜ் சிங் சவுகானுக்கு தேர்தலில் மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சவுகான் தனது புதினி தொகுதியில் போட்டியிடுகிறார். சபாநாயகர் கிரிஷ் கவுதம், கடந்த முறை வெற்றி பெற்ற தேவ்தலப்பில் போட்டியிடுகிறார். அடுத்த வருடம் மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ளவிருப்பதால் மத்திய பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட 5 மாநில தேர்தல் வெற்றிக்காக பா.ஜ.க. அதிக தீவிரம் காட்டி வருகிறது.

# ராஜஸ்தான் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு நவம்பர் 25 இற்கு மாற்றம்!

ராஜஸ்தான் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு திகதியை நவம்பர் 23 திகதியிலிருந்து நவம்பர் 25 திகதிக்கு மாற்றி இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், ராஜஸ்தானில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள திகதியில் அதிக அளவில் திருமணங்கள் மற்றும் சமூக நிகழ்வுகள் நடைபெற இருப்பதால் மாநிலத்தில் தேர்தல் திகதியை மாற்றிமைக்க வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகளிடமிருந்து தேர்தல் ஆணையத்துக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அன்றைய தினம் தேர்தல் நடைபெற்றால் அது பெரிய அளவில் மக்கள் வாக்குப்பதிவில் பங்கேற்பதை பாதிக்கும், பாதுகாப்பு சிக்கல்களும் ஏற்படும் என்றும் கூறப்பட்டது. இந்தப் பிரதிநிதித்துவம் மற்றும் காரணிகளைக் கருத்தில் கொண்டு ராஜஸ்தான் தேர்தல் திகதியை நவம்பர் 23 ஆம் திகதியில் இருந்து நவம்பர் 25 ஆம் திகதிக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது. வாக்கு எண்ணும் திகதியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

முன்னதாக, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலங்கானா சட்டப்பேரவை பதவிக் காலம் வரும் 2024 ஜனவரியில் வெவ்வேறு திகதிகளிலும், மிசோரம் சட்டப்பேரவை பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் 17 ஆம் திகதியும் முடிவடைகிறது.

அதனால், ஒக்டோபர் 9 ஆம் திகதி 5 மாநில சட்டப்பேரவைகளுக்கு நவம்பர் 7 முதல் 30 ஆம் திகதி வரை தேர்தல் நடைபெறும். வாக்கு எண்ணிக்கை டிசம்பர் 3 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இது குறித்து டில்லியில் செய்தியாளர்களிடம் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தெரிவிக்கையில்,

மிசோரம் சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக வரும் நவம்பர் 7 ஆம் திகதி தேர்தல் நடைபெறும். சத்தீஸ்கர் சட்டப்பேரவைக்கு நவம்பர் 7, 17 ஆம் திகதிகளில் 2 கட்டமாக தேர்தல் நடைபெறும். மத்திய பிரதேசத்தில் நவம்பர் 17, தெலுங்கானாவில் நவம்பர் 30 ஆகிய திகதிகளில் தேர்தல் நடைபெறும். சத்தீஸ்கர் தவிர ஏனைய 4 மாநிலங்களிலும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும்.

5 மாநில தேர்தல்களில் பதிவாகும் வாக்குகள் டிசம்பர் 3 திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் தீவிரம்!

## உயிரிழப்புகள் அதிகரிப்பு, இருளில் மூழ்கும் காசா!





ஹமாஸ் தாக்குதலில் 169 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களுடன் முதல் விமானம் தெற்கு இஸ்ரேலில் தரையிறங்கியுள்ளது எனவும் இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் 5 ஆவது நாளை கடந்துள்ளது. இந்தநிலையில், காசா மீதான வான்வழித் தாக்குதலுடன் தரைவழி தாக்குதலையும் அதிகரிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. இஸ்ரேல் இராணுவம் அதிகமான துருப்புகளை தெற்கு இஸ்ரேல் பகுதியில் நிலைநிறுத்தியுள்ளது.

ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இதுவரை இஸ்ரேலில் 1,055 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர், 3,000 பேர் காயமடைந்துள்ளனர். காசா மீதான இஸ்ரேல் தாக்குதல்களில் இதுவரை 950 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். சுமார் 5,000 பேர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் செயல்பட்டுவந்த ஒரே மின் உற்பத்தி நிலையத்தில் சில மணி நேரங்களில் எரிபொருள் தீர்ந்துவிடும் எனச் சொல்லப்பட்டிருப்பதால் காசா நகரம் இருளில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காசாவில் உள்ள அதிகாரிகள் கூறுகையில், எரிபொருள் தீர்ந்து போனதால் சில மணிநேரங்களில் மின் உற்பத்தி நிலையம் முழுவதுமாக மூடப்பட்டு மின் விநியோகம் தடைபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

மின் விநியோகம் சில பகுதிகளில் தடைப்பட்டிருப்பதால் காசா மருத்துவ மனைகளில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால், போரில் காயமடைந்தவர்களை காப்பாற்ற மருத்துவமனைகளில் ஜெனரேட்டர்களை பயன்படுத்த பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

காசா மீது இஸ்ரேல் நடத்திய குண்டு வீச்சு தாக்குதலில் 9 ஐ.நா ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் வடக்கு பகுதியை லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு குறிவைத்து தாக்கிவரும் நிலையில், எதிர்த் தாக்குதல் நடந்து வருகிறது. மேலும், லெபனானில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு பதிலடி கொடுப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதலுக்கு ஹிஸ்புல்லா பொறுப்பேற்றுள்ளது.

ஐ.நா. அகதிகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், காசா நகரில் இருந்து ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 500 பேர் வெளியேறி உள்ளனர். இவர்களில் 1,37,00 பேர் பாடசாலை , கல்லூரிகளில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். காசா நகரில் 790 அடுக்குமாடி குடியிருப் புகள் தரைமட்டமாகி உள்ளன. 5 ஆயிரத்து 330 அடுக்குமாடி குடியிருப் புகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்,

காசா நகருக்கான குடிநீர், உணவு, மருந்து விநியோகம் தடைபட்டிருக்கிறது. இந்த பகுதி மருத்துவமனைகளில் ஏராளமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். எரிபொருள், மின்சாரம், தண்ணீர், மருந்துகள் இல்லாமல் மருத்துவமனைகளை நடத்த முடியாது. எனவே சர்வதேச சமூகம் இந்த விவகாரத்தில் தலையிட வேண்டும் என்று கோரப்பட்டு உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் வால்கர் துர்க் கூறும்போது, காசா நகருக்கு தேவையான அடிப்படை வசதிகள் துண்டிக்கப்பட்டு இருப்பதால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின்படி பொதுமக் களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படக்கூடாது.

இஸ்ரேலின் நட வடிக்கை சர்வதேச சட்டத்துக்கு எதிரானது என்று தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பில் சுமார் 30 ஆயிரம் பேர் உள்ளதாகக் கூறப்படுகிறது. காசா நகர் பதுங்கு குழிகளில் இருந்து இஸ்ரேலை குறிவைத்து அவர்கள் தொடர்ச்சியாக ஏவுகணை குண்டுகளை வீசி வருகின்றனர்.

ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாத குழுக்களும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

அந்த குழுக்கள் இஸ்ரே லின் வடக்குப் பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்துகின்றன. அதோடு இஸ்ரேல் எல்லைப் பகுதியில் ஊடுருவ ஹமாஸ், ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர்.

## ஹமாஸ் ஆயுததாரிகளின் செயற்பாடு தவறானது: ஜோ பைடன்

ஹமாஸ் தீவிரவாதத்திற்கு பதிலளிக்க வேண்டிய கடமையும் உரிமையும் இஸ்ரேலுக்கு இருக்கிறது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுடன் அமெரிக்கா நிற்கும் எனவும் அதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மோதல்களில் 14 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் பலர் பணயக்கைதிகளாகப் பிடிபட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக் காட்டினார். ஹமாஸ் அமைப்பின் இந்த வெறித் தனமான செயலை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

கொல்லப்பட்ட அல்லது காணாமல் போயுள்ள அமெரிக்க பிரஜைகள் தொடர்பான அடையாளங்கள் அதிகாரிகளால் இதுவரை அறிவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.




# ரோஹித் ருத்ரதாண்டவம்

# இந்தியா அபாரம்!

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான உலகக் கிண்ண லீக் ஆட்டமொன்றில் இந்தியா அபார வெற்றிபெற்றுள்ளது.

13ஆவது உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று (11) நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா – ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி, ஆப்கானிஸ்தான் அணியின் ஹஷ்மதுல்லா ஷஹிதி (80), அஸ்மதுல்லா ஒமர்ஜாய் (62) ஆகியோர் பொறுப்புடன் ஆடி அரைச் சதமடித்தனர்.

இறுதியில், ஆப்கானிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 272 ஓட்டங்களைச் சேர்த்தது

இந்திய அணி சார்பாக பந்து வீச்சில் பும்ரா 4 விக்கெட்டுகளையும், ஹர்திக் பாண்டியா 2 விக்கெட்டுகளையும், குல்தீப் யாதவ், ஷர்துல் தாக்குர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர் 273 ஓட்டங்கள் என்ற வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது.

தொடக்கம் முதல் ரோஹித் அதிரடியாக ஆடினார். இஷான் கிஷன் மறுமுனையில் நிலைத்து நின்று ஆடினார்.

ரோஹித் சர்மா பந்துகளை பௌண்டரி சிக்சர் எனப் பறக்க விட்டார். தொடர்ந்து அதிரடி காட்டிய அவர் ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சை துவம்சம் செய்தார்.

ஒரு கட்டத்தில் அவர் 63 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். பின்னர் ரோஹித் சர்மா 84 பந்துகளில் 131 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இவருடன் களமிறங்கிய இஷான் கிஷன் தன் பங்குக்கு 47 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் அரைச்சதத்தை நழுவவிட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்ததாகக் களமிறங்கிய விராட் கோஹ்லி அரைச்சதம் (55)அடித்தார். இவருடன் ஆடிய ஸ்ரேயஸ் அய்யர் (25) தன் பங்குக்கு அதிரடி ஆட்டத்தை ஆடினார்.

இறுதியில் இந்திய அணி 35 ஓவர்கள் முடிவில் 273 ஓட்டங்களைக் குவித்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக ரோஹித் தெரிவானார்.

இந்திய அணிக்கு இது 2ஆவது வெற்றியாகும்.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | நியுஸிலாந்து | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.958 |
| 02 | இந்தியா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.500 |
| 03 | பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 0.927 |
| 04 | தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 2.040 |
| 05 | இங்கிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.553 |
| 06 | பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.653 |
| 07 | அவுஸ்திரேலியா | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -0.883 |
| 08 | இலங்கை | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.161 |
| 09 | நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.800 |
| 10 | ஆப்கானிஸ்தான் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.907 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி

## ஓர் ஆட்டத்தில் இரு சாதனைகள்




ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், ரோஹித் சர்மா 63 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். இதன்மூலம் உலகக் கிண்ணப் போட்டிகளில் குறைந்த பந்துகளில் சதம் அடித்த இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். .

மேலும் இந்தப் போட்டியில் ரோகித் சர்மா 5 சிக்ஸர்கள் அடித்ததன் மூலம் சர்வதேச அளவில் 3 வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் அதிக சிக்ஸர்களை அடித்த வீரர் என்ற சாதனையையும் நிகழ்த்தியுள்ளார்.

சர்வதேச போட்டிகளில் அதிக சிக்ஸர்கள் அடித்த ரோஹித் சர்மா (556 சிக்ஸர்கள்) முதல் இடத்திலும், கிறிஸ் கெய்ல் (553 சிக்ஸர்கள்) 2ஆவது இடத்திலும், அப்ரிடி (476 சிக்ஸர்கள்) 3ஆவது இடத்திலும் உள்ளனர்.




# கல்முனை கல்வி வலயத்துக்கு கராத்தேயில் முதல் பதக்கம்

## பற்றிமா மாணவன் ரோஹித் சாதனை

(வி.ரி.சகாதேவராஜா)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கராத்தேப் போட்டியில் கல்முனை கல்வி வலயத்துக்கு பதக்கம் கிடைத்துள்ளது.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவன் கேதீஸ்வரன் ரோஹித் இந்தப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

காலியில் கடந்த ஏழாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கராத்தே போட்டி நடைபெற்றது.

இதில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவன் கேதீஸ்வரன் ரோகித் 16 வயதுக்கு உட்பட்ட கும்மிட்டே போட்டியில் வெண்கலபதக்கம் வென்றுள்ளார்.

இம் மாணவன் 36 வீரர்களுடன் போட்டியிட்டு 3ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

சாதனை மாணவனை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் றெஜினோல்ட் வாழ்த்திப் பாராட்டினார்.







# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரி சங்க உறுப்பினர்களின் கிரிக்கெட்

(சியாத் எம். இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரி சங்கம் நடத்திய கிரிக்கெட் தொடர் நலன்புரி சங்கத்தின் தலைவர் டொக்டர். ஏ.ஜி.எம்.ஷயீ தலைமையில் அட்டாளைச்சேனை அஸ் ஸஹ்றா வித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரி சங்கத்தின் உறுப்பினர்களுக்கிடையில் இப்போட்டி நடைபெற்றது.

இதில், தீவிர சிகிச்சைப் பிரிவு, அலுவலக மற்றும் துணை மருத்துவ சேவை பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, பராமரிப்புப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, பொது வைத்திய பிரிவு என 6 அணிகள் பங்கேற்றன.

இதன் இறுதிப்போட்டிக்கு அவசர சிகிச்சைப் பிரிவு, அலுவலக மற்றும் துணை மருத்துவ சேவைப் பிரிவு அணிகள் தெரிவாகின.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவசர சிகிச்சைப் பிரிவு அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 63 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அலுவலக மற்றும் துணை மருத்துவ சேவைப் பிரிவு அணி 4.3 ஓவர்களில் 64 ஓட்டங்களைச் சேர்த்து தொடரின் சம்பியனாகியது.

இத் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக டொக்டர். எம்.ஏ. சுஹைல் அஹமட தெரிவானார். இறுதிப் போட்டி மற்றும் தொடர் ஆட்ட நாயகனாக ஜே.எம். இர்சாத் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்.



# மாத்தறையின் பல பகுதிகளுக்கும் மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை

மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ, பிட்டபெத்தர, ஹக்மன பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, காலி, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு முதலாம் , இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

மாத்தறை - பாணந்துகம நீர்மானியின் நீர் மட்டம் மீண்டும் 6.14 மீட்டர்களாக அதிகரித்துள்ளது. இது சிறிய வெள்ள நிலைமையை விட அதிகமாகும்.

தல்கஹகொட நீர்மானியின் நீர்மட்டம் 2.41 ஆக காணப்பட்டது. இது சிறிய வெள்ள நிலையின் அறிகுறியாகும்.

ஹக்மன, மாத்தறை பிரதான வீதியின் பண்டத்தர பகுதியில் உள்ள வீதி மீண்டும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கொட்டபொல பகுதியிலும் நேற்று காலை முதல் பலத்த மழை பெய்தது.

மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என மாத்தறை மாவட்ட இடர்முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நீரேந்து பகுதிகளில் பெய்து வரும் கடும் மழையினால், நில்வலா கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இதனிடையே, மாத்தறை - கத்துவ, மாலிம்பட, அத்துரலிய, கட்டுவாங்கொட, அக்குரஸ்ஸ, துடாவ, பிலதுவ பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது

கண்டி மாவட்டத்திலும் தற்போது கடும் மழை பெய்து வருகின்றது.

கண்டி - பொல்கொல்ல மகாவலி அணையின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 17ஆம் திகதி வரை நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



# வெள்ளப்பெருக்கு பிரதேசங்களில் தொற்று நோய்கள் பரவும் அபாயம்

## பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



நிலவும் சீரற்ற காலநிலையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண –

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள பகுதிகளில் வைரஸ் காய்ச்சல்கள் மற்றும் டெங்கு உள்ளிட்ட தொற்றுக்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. நீர் ஆதாரங்கள் மாசுபடுவதால் வயிற்றுப்போக்கு போன்ற தொற்றுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

எவ்வாறாயினும், இந்த விவகாரம் தொடர்பாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பாதிக்கப்பட்ட குடிதண்ணீர் நிலைகளைச் சுத்திகரிக்க உள்ளூர் அதிகாரிகள் மற்றும் பிற தன்னார்வ அமைப்புகளுடன் கைகோர்க்க பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் திட்டமிட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் முயற்சியில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து உணவுக் கடைகளையும் ஆய்வு செய்யத் திட்டமிட்டு வருகிறோம்.

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் கணிசமாக அதிகரித்துள்ள நிலையில், இது தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அவர்களின் குடியிருப்பு வளாகங்கள், அலுவலகங்கள் போன்றவற்றில் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்கள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும்" – என்றும் உபுல் றோஹண பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.



# ஓட்டோ சங்கத்தினர் நேற்று கவனவீர்ப்பு!

யாழ். மாவட்ட ஓட்டோ சங்கத்தினர் நேற்றைய தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

அண்மைய நாள்களில் யாழ் மாவட்டத்தில் இணைய செயலி மூலம் ஓட்டோ சேவையை மக்கள் பயன்படுத்தி வருவதன் காரணமாக தாம் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் எனவும் அதனை நிவர்த்தி செய்யுமாறு கோரியுமே இப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை பண்ணையில் அமைந்துள்ள தூர இடங்களுக்கான பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமான பேரணி, யாழ் நகரில் உள்ள வீதி வழியாக வருகை தந்து இறுதியில் கடற்றொழில் அமைச்சரிடம் மகஜர் ஒன்றக் கையளித்து நிறைவுபெற்றது.





# பல்கலைக்கழக விடுதிகளில் இரவு வேளையில் திடீர் சோதனைகள் நடத்துவதற்குத் தீர்மானம்!

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தகவல்



பல்கலைக்கழக விடுதிகளை இரவு வேளைகளில் திடீர் சோதனைக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விடுதிகளில் இடம்பெறும் பகிடிவதைகளை தடுப்பதே இதன் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதிகளில் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 05 மணி வரையான காலப்பகுதியில் அதிகளவிலான பகிடிவதைகள் இடம்பெறுகின்றன எனக் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்காக பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரிகள் மற்றும் மாணவ ஆலோசகர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

அவர்களுக்கு தேவையான போக்குவரத்து மற்றும் வாகன வசதிகள் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இதன்போது தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையைத் தடுப்பதற்கான தேசிய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக "வட்ஸ் அப்" இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விரைவான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.



# தொழில் வாய்ப்புக்காக இஸ்ரேல் செல்லும் இலங்கையர்களுக்கான முக்கிய அறிவிப்பு

இஸ்ரேலிய மக்கள் தொகை, குடியேற்ற அதிகாரசபை மற்றும் வெளியுறவு அமைச்சின் அனுமதி பெறப்பட்ட பின்னர் மாத்திரம், இனிவரும் காலங்களில் இஸ்ரேலிய தொழில் வாய்ப்புகளுக்காக இலங்கையர்களை அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் – பலஸ்தீன் மோதல்களின் காரணமாக உருவாகியுள்ள பாதுகாப்பற்ற நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா குறிப்பிட்டார்.

இதனிடையே, இஸ்ரேலில் இருந்து வெளியேற வேண்டுமாயின், இலங்கை தொழிலாளர்களுக்கு அதற்கான வாய்ப்பு காணப்படுகிறது என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.



# சீனா - இலங்கை இணக்கப்பாடு நாணய நிதியத்திற்கு தெரியாது!




இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் விசேட உடன்பாடு எதுவும் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து தனக்கு தெரியாது என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள இலங்கைக்கான சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் புரூவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அதற்கு கடன்வழங்கிய நாடுகளிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதை நாங்கள் அறிவோம்.எனினும் விசேட இணக்கப்பாடுகள் குறித்து எதுவும் எங்களிற்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# பொலிஸ் உயர் அதிகாரிகள் பலருக்கு உடனடி இடமாற்றம்

பிரதி பொலிஸ் மா அதிபர்கள் இருவர் மற்றும் பதில் பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மூவர் உள்ளிட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் கடந்த 09 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கே.கட்டுபிட்டிய மேல் மாகாணத்தின் தெற்கு பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து போக்குவரத்து மற்றும் சமிக்ஞை பிரிவிற்கு பொறுப்பான பதவிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பிரதி பொலிஸ் மா அதிபர் ஜீ.எம்.எச்.பி. சிறிவர்தன போக்குவரத்து மற்றும் சமிக்ஞை பிரிவில் இருந்து பொலிஸ் தலைமையகத்தின் பிரதி பொலிஸ் மா அதிபர் பதவிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, பதில் பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மூவர் மற்றும் கடமைகளை முன்னெடுப்பதற்காக பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மூவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவருக்கும் இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எல்பிட்டிய பிராந்தியத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். குமாரசிங்க குளியாபிட்டி பிராந்தியத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனிடையே, பிரதி பொலிஸ் மா அதிபர்கள் பதவியின் கடமைகளை முன்னெடுப்பதற்காக, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.



# நீர்ப்பாசன திட்ட வடிவமைப்பாளர் நீர்த்தேக்கத்தில் மூழ்கி உயிரிழப்பு

**(ரஸீன் ரஸ்மின்)**

இங்கினிமிட்டிய நீர்ப்பாசன பொறியியற் காரியாலயத்தில் கடமையாற்றிய திட்ட வடிவமைப்பாளர் ஒருவர் இக்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என நவகத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல், தெமடகஹ பெலஸ்ஸ பகுதியைச் சேர்ந்த டி.பி.சமீர சதருவன் பிரேமசிறி (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் நேற்று முன்தினம் மாலை முதல் நீரில் மூழ்கிக் காணாமல் போயிருந்தார் எனப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தின் கிழ் உள்ள குளங்களைச் சுற்றி அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை தொடர்பில் ஆராய அந்தத் திட்ட வடிவமைப்பாளர் உள்ளிட்ட குழுவினர் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே மேற்படி திட்ட வடிவமைப்பாளர் நீர்த்தேக்கத்தில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார் எனப் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் நவகத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.10.2023

## மேஷம்

இன்று உற்சாகத்துடன் காணப்படு வீர்கள். இன்றைய நாளை நல்ல பலன் பெற பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கடின முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து முடிவெடுப்பீர்கள்.

நீங்கள் செய்யும் பணியை விரும்பி செய்வீர்கள். சுய வளர்ச்சி மூலம் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். இன்று அதிர்ஷ்டத்தை விட கடின உழைப்பை நம்ப வேண்டும்.

உங்கள் துணையுடன் இன்றைய தினத்தை கொண் டாடி மகிழ்வீர்கள். இனிமையான வார்த்தைகளை பரி-மாறிக் கொள்வதன் மூலம் இருவரும் புரிந்துணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகையாக பண வரவு காணப்படும். நீங்கள் உங்கள் முயற்சியில் நேர்மையாக இருப்பீர்கள்.

## ரிஷபம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைக் காது. தீய விளைவுகளை தவிர்க்க நீங்கள் எந்த விஷயத்தையும் தொடங்குமுன் யோசித்து செயற்பட வேண்டும். பிறருடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தொடர்பும் சமூகமாக இருக்காது.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அமைதியாக அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் பேசும் போது கவன மாக இருக்க வேண்டும்.

இன்று ஏற்படும் செலவுகளை தவிர்க்க முடியாது. உங்கள் செலவுப் பழக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம்.

முதுகுவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

## மிதுனம்

உங்கள் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் இன்று தடைகள் நிறைந்து காணப்படும். விரும்பத்தகாத சூழ்நிலை இருந்த போதிலும் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நீங்கள் ஒருவிதமான வெறுமையை உணர்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. பணிகளை ஆற்றும் போது சில தாமதங்கள் ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் எரிச்சலை வெளிப்படுத்துவீர் கள். இந்த உணர்வை தவிர்த்து உங்கள் துணையை நகைச்சுவை உணர்வோடு அணுக வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். அதிக பணம் செலவாகும். நிதி சம்பந்தமாக எடுக்கும் முக்கிய முடிவுகள் எடுக்கக் நல்ல பலனைத் தராது.

## கடகம்

இன்று ஆக்கபூர்வமான நாள். நபர்கள் மூலம் ஆதரவும் பலனும் பெறுவீர்கள். இன்று உற்சாகமாக காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் செயல்திறனில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர் கள். நல்ல தருணங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொண்டு புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். புதிய மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

இன்று வரவுகள் அதிகமாக காணப்படும். சொத்துக்கள் வாங்குவதற்கு உங்கள் பணத்தை முதலீடு செய்வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர் கள். ஆற்றலும் உறுதியும் கொண்டு சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.

## சிம்மம்

இன்று மிதமான பலன்களே காணப்படும். இன்று பொறுமையாக இருக்க வேண்டும். தியானம் மேற்கொள் வதன் மூலம் எத்தகைய சூழ்நிலையை யும் எதிர்கொள்ள முடியும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே திட்டமிட்டு அதன்படி பணிகளை ஆற்றினால் வெற்றி காண இயலும்.

உங்கள் துணையுடனான உறவில் அகந்தைப் போக்கு காணப்படும். இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

சோம்பல் தனம் காரணமாக இன்று பண இழப்பு நேரலாம். பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

பதற்றம் காரணமாக இன்று உங்களுக்கு கால் மற்றும் தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும். சூழ்நிலை கட்டுக்கடங்காமல் இருக்கும். எனவே சிந்தித்து செயல்பட வேண்டும்.

இன்று பணியிடத்தில் கவனமின்மை காரணமாக தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே கவன மாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த அளவு இணக்கம் காணப்படும். தவறான புரிந்துணர்வு காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று பெரிய அளவில் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும் என்பதால் இன்று பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

இன்று ஒவ்வாமை காரணமாக அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.

## துலாம்

இன்றைய நாள் மந்தமாக காணப் படும். உங்கள் நம்பிக்கைக்கு உயிர் கொடுங்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி பெற நம்பிக்கை முக்கியம்.

உங்கள் பணியில் ஏமாற்றமான சூழ்நிலைகள் காணப்படும். பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. இது உங்களுக்கு வருத் தத்தை அளிக்கும். நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு ஒருவருக்கொருவர் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் துணையிடம் பொறுமையையும் அன்பையும் வளர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். இதனால் கவலைகள் ஏற்படும்.

## விருச்சிகம்

இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று நன்மை தரும். உற்சாகமான அணுகுமுறை மூலம் இன்றைய நாளை சிறப்பாக்கிக் கொள்ளலாம்.

சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து எதிர் பாராத அனுகூலங்கள் கிடைக்கும். சாதித்த உணர்வு உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இது நல்ல புரிந்துணர்வு உருவாக வழி வகுக்கும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதுமான தாக இருக்கும். உங்கள் சேமிப்பையும் உருவாக்க முடியும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உடலும் மனமும் ஆரோக்கியமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -12.10.2023




இன்று சுமூகமான நாளாக இருக்கும். உறுதியான போக்கு உங்களை நல்ல முடிவு எடுக்க வைக்கும். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை இன்று மகிழ்ச்சியான நாள். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பாராட்டு பெறுவீர்கள். புதிய வாய்ப்புகள் பெருகி காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு அதிகரிக்கும்.

உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலையில் இருப்பீர்கள்.கணிசமானபணம்சம்பாதிக்கஅதிர்ஷ்டம்உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். இசையைக் கேட்டதன் மூலம் அமைதி பெறலாம். இது பிரச்சினைகளைக் கையாள உதவும். வாக்குவாதங்களிலிருந்து விலகி இருக்கவும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

உங்கள் பணியைக் கையாளும் போது கவனம் செலுத்த வேண்டும். இதனால் உங்கள் திறன் அதிகரிக்கும். தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் பேசும்போது நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவு பாதிக்கும். பேசும்போது கவனம் தேவை.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. அதிக பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு குறைவு.




இன்று நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். நல்ல பலன்களைக் காண நீங்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். உங்கள் வளர்ச்சியில் மிகுந்த தடைகளை எதிர்கொள்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டியது முக்கியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். அத்தகைய போக்கை தவிர்த்து அமைதியாக இருப்பது நல்லது.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும்.




இன்று பல நன்மைகள் நடக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலனைத் தரும். சமூகத்தில் புதிய நபர்களின் தொடர்பு கிடைக்கும்.

உங்கள் திறமைகளை தனித்த அணுகுமுறை மூலம் வெளிபடுத்டுவீர்கள். இதனால் பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையே நல்லறவு வளரும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். ஊக்கத்தொகை போன்ற கூடுதல் பண வரவு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




